ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अस्यादेष निस्सरते नराणां क्रोधः प्रमादो लोभरूपश्चमृत्युः ।
अहंगतेनैव चरन्विमार्गान् नचात्मनो योगमुपैतिकश्चित् ॥

ஓ! அரசனே? பிரமாதமென்னும் மிருத்தியுவானது (அஹங்காரமாக பரிணமம்பெற்று) அத்தகைய அஹங்காரத்தினின்றும் (காமமும்) அதினின்றும் கோபமும், அதினின்றும் மோஹமும், அதினின்றும் லோபமும் வெளிப்படும்படி செய்கின்றது. இவ்வஹங்காரத்துடன் அத்யாஸவசத்தாலேயே சாஸ்திர விருத்தமார்க்கத்தில் ஸஞ்சரித்தவனுயிருந்துகொண்டு பரமாத்ம ஸமாதிநிலையை ஒருவனும் அடைகிறதில்லை.

ஜீவராசிகள் பேரின்பவீடு பெருமல் ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடப்பதற்குப் பல காரணமிருப்பினும் மூலாக்ஞானத்தின் முதல் விகாரமாய் முளைத்த அஹங்காரமே ஆதிகாரணமாகும். பரமேசுவரனிடம் அத்புத சக்திவடிவமாய் அமைந்துள்ள அவ்வக்ஞானத்திற்கு ரஜோகுணத்தால் விக்ஷேப சக்தியும் தமோ குணத்தால் ஆவரண சக்தியும் உண்டு. இவ்வாவரண சக்தியால் ஒருவஸ்து வேறொன்ருய் விளங்கும். இதனுல் மூடப்பட்ட புருஷன் வஸ்துவின் யதார்த்த ஸ்வரூபத்தை ஒருக்காலுமறிய மாட்டான். சம்சயாதிகளிவனை விட்டுப்போவதில்லை. இவ்வாவரணத்தால் விக்ஷேபசக்தியும் உண்டாக்கி, அஹங்காரம், காமம், குரோதம், லோபம் டம்பம், அஸூயை, ஈர்ஷை, மத்ஸரம், முதலிய மனோவிகாரங்களால் இவனை இங்குமங்குமலையும்படி செய்கின்றது. ஆவரண சக்தியின் காரியமாயுள்ள விக்ஷேபத்தால்தான் ஜீவர்கள் நாநாவித துன்பத்திற்காளாகிருர்கள். இதன் மஹிமையால்தான் சுருதிஸ்மிருதிகளைப் பிரமாணமென நம்பாமலும், அதில் கூறப்படும் ஸ்வதர்மங்களை நிஷ்காமமாய் அனுஷ்டிக்க மனமில்லாமலும், வெகுவாய் எடுத்துப் போதித்தாலும், அவற்றில் நல்லதென்றெண்ணம் எள்ளளவுமில்லாமலும் பிராணிகள் மேன்மேலும் பல துன்பங்களை அனுபவித்துவருகிருர்கள். ஆகவே அகண்டாநந்தப் பிரும்ம மாத்திரமாக விளங்கும் ஜீவர்களுக்கு இவ்வஹங்காரத்தோடு அற்பமாவது அத்யாஸம் இருக்கும்வரையில், தேஹத்தில் விஷ ஸம்பந்தம் அற்பமிருந்தாலும் ஆரோக்கியமில்லாததுபோல் அகண்டாநந்தபதவியின் பேச்சுக்கே இடமில்லை. ஆதலின் நமக்குப் பெருந்தீங்கு செய்துவருகின்ற சத்துருவான இவ்வஹங்காரத்தை ஆத்மாவாகக் கருதாமல் அதில் சென்ற சித்த விருத்தியை அந்தர்முகமாய்த் திருப்பி நமது பரமாத்ம ஸ்வரூப ஞானவாளால் அதைக் கொன்று ஸ்வஸ்வரூப ஸாம்ராஜ்ய சுகத்தை இஷ்டப்படி அனுபவித்து மௌன நிலையில் அமர்ந்து விளங்கவேண்டும் என்பது பாவமாகும்.

சுபம்.

V. J. S.

தற்காலத்திய வருணாசார நிலை.

தற்காலம் நம் பாதகண்டத்தின் பரிதாபநிலையைப் பற்றிப் பலதடவைப் பத்திரிகைகளில் பிரஸங்கித்துவந்தபோதிலும், அப்பிரஸங்கமெல்லாம் "செவிடன்காதில் ஊதின சங்குத் துவனிப்போல்" நிஷ்பிரயோஜனமாக ஏற்பட்டுவிடுகிறது. தற்காலத்திய ஆர்யர்களின் மனமானது கருங்கல்லாயிருத்தலால் அதற்கேற்ற செம்மட்டிபோன்ற கடுஞ்சொற்களைக்கொண்டும் அவர்களை சீர்திருத்தும் பெரும்படி செய்வது உசிதந்தானாகும். இச் செம்மட்டி அடியினாலும் நம்மவர் திருந்தாமல்போனால் எமக்கு யாதொரு குறைவும் ஏற்படமாட்டாது. அவர்களுக்குத்தான் அதோகதி ஏற்பட்டுவிடும். சில ஆர்யர் திருந்தினாலும் திருந்தலாம், திருந்தாதவரைப்பற்றி நமக்கென்ன குறைவு. ஆனால் ஆரியர் மேனாட்டுத் துராசாரங்களை அப்யஸித்துக்கொண்டு கெட்டலைவதால்தான் இவ்வுலகம் இங்ஙனம் சீரழிந்தநிலையிலிருக்கின்றது.

நம்மிந்தியாவில் தற்காலத்தில் நவீன நாகரீகத்தில் முதன் முதலாக மோஹங்கொண்டவர் பிராம்மணரேயாவர். இப்படிப்பட்ட துராசாரங்களதிகரித்துவிட்டதால்தான் நன்னாடாகிய நம் நாடு க்ஷாமதசையில் கஷ்டப்படுகின்றது. ஆர்யருக்கு ஆயுள் காலமும் அற்பமாய்விட்டது. சரீர வலிமை குறைந்தது. வாந்தி, பேதி, முதலிய துர்வியாதிகள் நம் தேசத்தில் குடிகொண்டு நம்மவரை வாட்டுகின்றன. காலாகாலங்களில் மழை பெய்வதில்லை. அதனால் விளைவு குன்றிவிட்டது. அகவிலையும் படுத்துவிட்டது. இன்பம் நீங்கி துன்பம் ஓங்கிவிட்டது. ஆர்யர்களின் ஆசாரம் எல்லாம் அனாசாரமாக மாறிவிட்டது. தேவஸ்தானமெல்லாம் பூதஸ்தானமாகிவிட்டது. கொலை, களவு, சூது, வியபிசாரம், பொய்முதலிய மஹா பாபமெல்லாம் மலிந்து எங்கும்

வியாபிக்கலாயிற்று. வரவர துன்பங்களெல்லாம் ஜனங்களிடம் பெருகிக்கொண்டிருக்கின்றனவேயன்றி குறையவில்லை. இப்படிப் பட்ட நிலை எதனாலேற்படும்படி நேரிட்டதென்ற விஷயத்தையும் நம்மவர் கவனிப்பதில்லை. நம்மவரே இதன் காரணத்தை அறிந்து கொள்வதில் அனுதாபம் கொஞ்சமும் வைத்துக்கொள்ளாமலிருக் குங் காலத்தில் அயல் நாட்டு அரசாங்கத்தாருக்கு அவ்வுண்மை யையறிந்துகொள்வதிலும், அதனை நிவிருத்திப்பதிலும், அனுதா பம் ஏற்படுவது அருமையினும் அருமையேயாகும். அயல் நாட் டார் என்ன செய்வார் பாவம்!! நம்மவர் படும் துன்பங்களைத் திருஷ்டமாயுள்ள உபாயத்தால்தான் அவர்கள் நிவிருத்தி செய்வ தற்கு முயற்சிப்பார்கள். மழைபொழியாவிட்டால் நாடெங்குங் கிணறுகளை விருத்திசெய்யத்தொடங்குவார்கள். நமது நாட்டில் விளைவு குறைந்துபோனால் தம்நாட்டுணவைத்தம் தேசத்திலிருந்து கப்பல் கப்பலாக வரவழைப்பார்கள். வாந்திபேதி முதலிய மஹா ரோகங்கள் அதிகரித்து ஜனங்களைத் துன்புறுத்தினால் ஆஸ்பத்திரி களை அதிகப்படுத்துவார்கள். இப்படிப்பட்ட காரியங்களால் நம் துன்பம்நீங்கப்படாததுமன்றி மேன்மேலும் விருத்தியுமாகின்றது. முற்றிலும் துன்பம் நீங்கினபாடில்லை.

ஆகவே துன்பமெல்லாம் ஒழிந்து நாம் இன்பமாக இவ் வுலகில் வாழவேண்டுமானால் என்னசெய்யவேண்டும் என்பதை நடுநிலையில் நின்றுகொண்டு விசாரிக்கப் புகுங்கால் நம் புராதன புனிதாசாரானுஷ்டானங்களை இயன்றவரையில் பரிபாலித்துக் கொண்டுவரவேண்டும் என்ற விஷயம் நன்கு புலப்படும்.

இவ்விஷயத்தில் அதிக முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டியவர் பிராம்மணரேயாவர். மஹரிஷிகளின் வம்சத்திலு தித்த பிராம்மணரோவெனின் வைதிகாசாரங்களையறவே ஒழித்து மிலேச்சாசாரங்களைக் கைக்கொண்டு ஸ்வஸ்வரூபத்தை நசிக்கும் படி செய்துகொண்டுவிட்டார்கள். மதாபிமானம், தேசாபிமா னம், ஸ்வஜநாபிமானம் சிறிதுமின்றி விவேகங்கெட்டு வேதசாஸ் திராதி வித்யாப்பியாஸமற்று கண்டவரெல்லாம் கடிந்துபேசும்படி யான நிலையில் தற்போது துக்கப்படுவதற்கு இக்கலிகால மஹத்வ மின்றி வேறென்ன காரணம்சொல்லமுடியும். அந்தோ! நம்மவ ரின் விபரீதாசாரங்களையும், துர்குணங்களையும் நாமே எடுத்துக் கூறுவதென்றால் லஜ்ஜையாயிருக்கின்றது.

பிராம்மணர் தவறி நடப்பதனாலேயேதான் இவ்வுலகத் திற்கே கஷ்டமுண்டாகிறது. இவர் தவாது தமது ஆசாரங்களை ஒழுவார்களாயின் இவ்வுலகமெல்லாம் சுகமாய் வாழும் என்பது நிச்சயம். தற்காலத்தில் பிராம்மணர்தான் பிறநாட்டுத் துராசாரங்களை நம்தேசத்தில் நிலைபெறச்செய்தவரில் முதன்மையானவர். இவர்களுடைய ஸஹவாஸத்தால்தான் மற்றவரிடம் இத் துராசாரம் பாவலாயிற்று. ஆஸ்திகர்களே! நன்றாய் ஆலோசித்துப்பாருங்கள். நமது பிராமணர்களிடத்தில் வேதாகமாப்யாஸம், ஜீவகாருண்யம், ஸத்யம், பொறுமை, ஆசாரம், தெய்வபக்தி, முதலிய நற்குண நற்செயல்களேதாவது கொஞ்சமாவது காணப்படுகின்றனவா? பூணூல்மட்டிலும் தரித்துவரும் போலிப் பிராம்மணர்களிடம் மற்றவருககு மதிப்பு எப்படி ஏற்படும்.

எல்லாப் பிராம்மணர்களுமே இப்படி மிலேச்சாசாரபார்களாகவும். போலிகளாவும், ஆகிவிட்டார்களென்பது என் கருத்தன்று. இக்கலியிலுங்கூட வைதிகாசாரங்களை சிறிதும் வழுவாது அனுஷ்டித்துவரும், பிராம்மணோத்தமர் பலருண்டு. அத்தகைய மஹான்கள் எக்காலத்திலும், நம் முன்னோர்களின், வழியினின்றும், சிறிதும் நழுவிவிடவே மாட்டார்கள். அவர்களை ஸாக்ஷாத் பகவத்ஸ்வரூபிகளென்று, அஞ்சி வணங்கி நாமும், மற்ற வகுப்பினரும், கொண்டாடலாம். ஒழுக்கங்குன்றிய பிராம்மணர்களிடம், யாருக்குத்தான் மதிப்பு ஏற்படும். தற்காலத்தில் வேறு சிலர், பிராம்மணர்களென்று தம்மை சொல்லிக்கொள்கிறார்கள். அவர் யாரெனின் விசுவகர்மப் பிராம்மணர், குலாலப்பிராம்மணர் முதலானவர்களே மேலே குறிக்கப்பட்ட பிராமணர்களைவிட இவர்களிடம், அனேக ஸதாசாரம் காணப்படுகின்றது. இவர்கள் மதுமாம்ஸ பக்ஷணத்தை, நிறுத்திவிட்டார்கள். ஸ்னானம் ஸந்தியாவந்தனம், சிராத்தம், அமா தர்ப்பணம், முதலிய ஆர்யாசாரங்களை, அனுஷ்டிக்கப் பழகிவருகிறார்கள். திரிபுண்டரம் முதலிய மத அடையாளங்களை அணிந்துகொள்ளத் தவறுவதில்லை. உபாகர்மம் செய்கிறார்கள், அன்னசிராத்தமும், செய்கிறார்கள்' வேதங்களையும் ஓதுகிறார்கள்.

இப்படியெல்லாமிவர்கள் தமது ஆசாரங்களை விலக்கி மேலோரின் ஆசாரங்களை விருத்திசெய்துவரு நிற்க, பிராம்மண ஸமூஹம்

மட்டிலும் நம் பூர்வீகாசாரத்தில் ஆசையில்லாமலிருப்பது வெகு விந்தையே. கீழே குறிக்கப்பட்ட பிராம்மணர் ஆரியாசாரங்களைக் கையாளுவதும் மேல் குறிக்கப்பட்ட பிராம்மணர்கள், ஆர்யாசாரங்களை அவர்களிடம் ஒப்பிவித்துவிட்டு அவர்களுடையவும், மேற்றிசையாருடையவும், துராசாரங்களை அனுஷ்டித்துவருவது கொடுங் கலியின் கோலமேயன்றி வேறல்ல.

தற்காலத்தில் ஆர்யர்களின் விபரீத நிலையைப்பற்றி நினைத்தால் மனம் நடுங்குகிறது. அந்நிலையைப்பற்றி நான் எவ்வளவு எடுத்துக் கூறினபோதிலும் பணம் உத்யோகம் முதலியவற்றில் பேராவல்கொண்ட நம்மவர் எவர்தான் செவிசாய்த்துக் கேட்கப் போகின்றனர். இத்தகைய விஷயங்களை எழுதுவதால் என்மீது கோபங்கொள்வார்கள் என்பது நிச்சயம். பிராம்மணர்களின் ஆசாரங்களை இகழ்ந்துகூறுவது எதற்காக என்று கேட்குங்கால் சாஸ்திரம் யுக்தி முதலிய பிரமாணங்களுக்கு விருத்தமாயும், நம் நாட்டினருக்கு ஒவ்வாததுமாகிய அத் துராசாரங்களால் சிறிதும் நன்மையில்லாததுபற்றியேயாகும். யாராயிருந்தாலும் வறட்டு கர்வங்கொள்ளாமல் பாபத்திற்குப் பயந்து மறுமையில் தேவதண்டனை உண்டென நம்பி அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளவேண்டியது அவசியமன்றோ.

ஆஸ்திகர்காள்! ஏதோ என் மனதிற்றோன்றியதை எழுதினதற்காக என்னிடம் கோபியாமல் ஸதாசாரங்களை விருத்திசெய்து கலிபாபங்களை அறவே ஒழிக்க முற்படுவீர்களாக. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றபடி இப்படி ஏற்படுவதெல்லாங்கூட பகவத் ஸங்கல்ப மஹிமையால்தானன்றோ? குற்றங்களை நாமே அறிந்து அகற்றிக்கொள்வதுதான் சிலாக்கியமேயன்றி மற்றவர் மூலமாக அறிந்துகொள்வது மிகவும் அனுசிதம் என்பதை மறக்கக்கூடாது. ஆதலால் நாம் கருணாகராகிய கடவுளின் திவ்ய நாமோச்சாரணத்தாலாவது இக் கலி ஸம்பவங்களை ஒழிக்க முன்வருவோமாக. சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

நாஸ்திகாஸ்திகஸம்வாதம்.

(884-ம்பக்கத் தொடர்ச்சி)

நா:— இதென்ன விபரீதமாயிருக்கிறதே. சாஸ்திரீயமார்க்கத்தி லுள்ளவர்களும் வெகுபேர்கள் துன்பப்படுகிறார்களே. அவ் விதமே சாஸ்திரத்தை நம்பாதவர்கள் வெகு சுகிகளாக வாழ வில்லையா? இவ்வாறு இருக்க சாஸ்திரீயமார்க்கம் சுகந்தரும் என்பது எப்படி?

ஆ:— இஃது உண்மையே ஆனால் சாஸ்திரத்தை நம்பாதவர்களின் வாழ்வு உண்மையில் சுகவாழ்வில்லை. சுகமென்பது திருப்தியா கும். இது மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் ஸமானமென்று ஒப்பமுடியவில்லை. விவேகவிக்ஞானம் மனிதர்களிடத்தில் அதி கமாய் இருப்பதால் அவர்களுக்கு மிருகங்களைக் காட்டிலும் சுகமதிகமென்றுதான் சொல்லவேண்டும். சாஸ்திரீயவிவேக மில்லாதமனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஸுகம் ஸமானமே யாகும். மிருகங்களுக்கும் விவேகமில்லையல்லவா? அவ்விவேக விக்ஞானம் சாஸ்திரத்தால் தான் ஏற்படவேண்டும். மனிதர் களுக்குள்ளேயே குருடனுக்கும் கண்ணுள்ளவனுக்கும் சுகக் குறைவுக் காண்பதுபோலவே சாஸ்திரக்ஞர்களுக்கும் அசாஸ் திரக்ஞர்களுக்கும் சுகதாரதம்யம் கண்டுகொள்ள வேண்டும். ஆகவே சாஸ்திரத்தை நம்பாத குருடர்களுடைய சுகமும் துன் பம் தான். ஆகவே சாஸ்திரீயமார்க்கமே சிரேஷ்டமானது.

நா:— இந்தக் கதையெல்லாம் இருக்கட்டும் ஐயா? இப்படி சா ஸ்திரம் பிரமாணம் 'சாஸ்திரம் பிரமாணம்' என்று கூக்குறல் இடுவதாலேயே நமது தேசமித்துணை க்ஷீணகதியை அடைந்து விட்டது. இப்படிப்பட்ட சாஸ்திரங்களால் தான் நாம் துக்க ஸாகரத்திலாழ்ந்து விட்டோம். மறுபடியும் அதையே திருப்பித் திருப்பி ஸ்தாபிக்க முன் வருகிறீரே. சாஸ்திரமும் நம்மைப் போல் ஒருவன் எழுதி வைத்ததுதானே ஐயா?

ஆ:— இதுதான் ஸாஹஸமும் வஞ்சகத்தனமுமாகும். இதனால் மகாபாவம் உங்களுக்குஸம்பவிக்கும். சாஸ்திரம் ஆதியந்தமற்ற தும் ஒரு புருஷரால் நிர்மாண பண்ணப்படாததுமல்லவா,

நா:— இதென்ன விந்தை ஒருவராலும் எழுதப்படாத புத்தகமும் இவ்வுலகிலுண்டோ.

ஆ:— உண்டு. இதைப்பற்றி வேரிடம் ப்ரஸ்தாபித்துக் கொள்கிறேன், ஈசுவரனே இவ்வேதத்தை அனுக்ரஹித்தார் என்பதில் என்ன தோஷம்.

நா:— அவனைத் தான் காணவில்லை என்றேனே.

ஆ:— சாஸ்திரீய ஸம்ஸ்காரமில்லாத உனக்கு அவருடைய ஸ்வரூபமும், சக்தியும், குணங்களும் எப்படித் தெறியும் லௌகிகர்களுக்குத்தான் உலகவியவஹாரம் தெறியும் என்பதுபோல் சாஸ்திரீய விஷயமும் சாஸ்திரகஞர்களுக்குத்தான் தெரியக்கூடும்.

நிதி (புதையல்) போன்ற பகவானைக் கண்டு பிடிப்பதற்காக அஞ்சனம் (ஒருவகை மை) போன்ற சாஸ்திரந்தான் அவச்யம். ஜீவேசுவர ஸ்வரூபம் பிரபஞ்சம் தர்மம் இவைகளை விளக்குவதுதான் சாஸ்திரமாகுமன்றோ? ஆகையால் பகவானைக் காணவில்லையே என்று என் அழுகிறாய்; பகவானையறியவேண்டிய ஸாதனமிருக்குமேயானால் நீரும் பகவானைப் பிரத்தியக்ஷமாய் அறிந்துவிடுவீர். பிரமாணமிருந்தாலல்லவா பிரமேயம் (விஷயம்) புலப்படும். ஆகவே அதற்குறிய சாஸ்திரப் பிரமாணத்தை நம்பாமல் விடுவது உம்முடைய தோஷந்தான், இதற்குப் பிறர் செய்வதென்ன?

நா:—அப்படியல்ல. எங்களுடைய தோஷங்களை விலக்க வேண்டியவர்கள் நீங்களே? இப் பிரபஞ்சத்தையும் நம்மையும் யாரோஒருவர் படைத்தாரென்பது ஸரியல்ல. இவை எல்லாவற்றிற்கும் உண்டாவதும் அழிவதும் ஸ்வபாவஸித்தம். ஸ்வபாவத்தால் முதலில் இவ்வுலகம் பூமிமாத்திரமாயிருந்தது. பிறகு கொடி, செடி, புல், பூண்டு, விருக்ஷம் முதலியஸ்தாவரமுண்டாயிற்று. அதன் பிறகு மிருகங்களும், அதன்பிறகு குரங்குகளும் அதற்குப்பின் மனிதர்களும், அதன்பிறகு அவர்களின் ஞானபிவிருத்தியும் கிரமமாய் ஏற்பட்டது. ஆகவே முன்னோர்களிடம் ஞானக் குறைவும், தற்காலத்தியவர்களிடம ஞானபிவிருத்தியும், ஸித்தமாயிற்று. ஞானத்தின் பரிபூர்ண நிலை இதுவரையில் ஒருவருக்கும் ஏற்படவில்லை என்பதும் ஸித்தம். இவ்வித

நிலைமையில் சாஸ்திரம் எங்கிருந்து ஸித்தமாயிற்று. ஞானம் பூர்ண நிலையை அடைந்தகாலத்தில் அல்லவா சாஸ்திரமென்ப தொன்று ஸித்திக்கப்போகின்றது. அதற்குப் பிராமாண்யமும் அப்போது ஒப்புக்கொள்ளலாம். அவ்வித நிலை ஏற்படாத காலத்தில் சாஸ்திரத்தை ஒப்புக்கொள்வதற்கு ஒருபோதுமவா காசமில்லை. ஜனங்களுக்கு ஞானபிவிருத்தியென்பது ஸ்வா பாவிகம். நமக்குப் பால்யகாலத்தில் அக்ஞான நிலைதான் ஏற் பட்டிருக்கிறது, பிறகுதான் ஞானமுண்டாகி கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியடைகின்றது. அதுபோல்தான் இவ் வுலகத்திற்கும் ஞானவிருத்தி ஏற்படுங் கிரமம் கூறவேண்டும்.

இவ் விஷயத்தில் வையாகரணர்களும் ஸம்மதியளித்தி ருக்கிறார்கள்

அதாவது

यथोत्तरं मुनीनां प्रामाण्यम् என்று

இந்த நியாயத்தாலும் முன்னோர்களுக்கு ஞானக் குறைவும் பிற்காலத்தியவர்களுக்கு அதிக ஞானமும் அதிகவிருத்தியடை கின்றது என்பது விசதப்படுகின்றது. ஆகையால் பிரக்ஞா விருத்தியடைந்த நமக்கு சாஸ்திரமெதற்கு?

ஆ:—பேஷ்! பேஷ்!! இவ்வுலக ஸிருஷ்டிக்கிரமத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கண்டு களிக்கின்றேன். இந்த மதம் தங்க ளைப் போன்ற தற்காலத்திய நவீன மேதாவிகளால் கண்டுபிடிக் கப்பட்டதா? அல்லது முற்காலத்திவர்களால் கண்டுபிடிக்கப் பட்டதா?

நா:—மூடர்களாகிய முன்னோர்களுக்கு இத்தகைய அறிய தத்து வங்களை ஆராய்ச்சி செய்வதில் ஸாமர்த்தியம் ஸம்பாவிதமில்லை யாதலால் உலக ஆராய்ச்சி நிபுணர்களாகிய தற்காலத்திய மேதாவிகளால்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆ:—முன்னோர்களைக்காட்டிலும் தற்காலத்தியவர்கள் அறிவாளி கள் என்பதானால் இனி வருங்காலத்தியவர்களைக்காட்டிலும், தற்காலத்தியவர்கள் மூடர்கள் என்பதைத் தாங்கள் அங்கீக ரிக்கவேண்டியதுதானே? தம்மைத்தாமே மூடனென்று ஒப் பும்படி நேரிட்டுவிட்டதே! தம்மைத்தாமே மூடனாக்கிக்கொண் டதுமன்றி முன்னோரையும் மூடராக்கிவிட்டீரே? ஆனால் "முன்

ஞோர்கள் மூடர்கள்'' என்பதில் கொஞ்சம் தகரார் இருக்கலாம். தங்களுடைய மூடத்தனம் தங்களுக்கும் ஸம்மதமானதால் தகராரே கிடையாது.

தவிர ஞானபிரவிருத்திக் கிரமத்தை ஆதரிப்பதில் பயன் என்னவென்று தங்கள் அபிப்பிராயம்?

நா:—தங்களுக்கு எதுவோ அதுதான் எங்களுக்கும்.

ஆ:—''அறிவில்லாதவர்களைச் சிக்ஷித்தல்'' ஞானத்தின் பிரயோஜனம் என்கிறோம்.

நா:—அதுதான் எமக்கும்.

ஆ:—இதுதான் சரிப்படாது. முன்னோர்களோ மூடர்களென்று தங்கள் கருத்து. வரப்போகின்ற சிறுவர்களோ ஸ்வபாவமாகவே தங்களைப்போன்ற தற்காலத்தியவர்களைக்காட்டிலும் அதிக மேதாவிகள் என்று சொல்கிறீர்கள். ஆகவே சிஷ்யன் ஒருவரும் கிடையாதாதலால் உம்முடைய ஞானம் இவ்வித குதர்க்கத்திற்காகத்தான் என்று சித்தம். ஆகையால் அதுதான் எமக்கும் என்பது எப்படிப் பொருந்தும்.

தவிர சிஷ்யனில்லாததால் சிக்ஷையில்லை. சிக்ஷையில்லாததால் தற்காலத்தியவர்களின் ஞானமும் சிக்ஷிதமில்லை. சிக்ஷித ஞானமில்லாததால் சிக்ஷித மதமுமில்லையென்றேற்படுவதால் தங்களுடைய ஞானம் நிஷ்பிரயோஜனம்.

நா:—தற்காலத்தியவர்களுக்கு ஞானபிவிருத்தியுண்டென்பதற்காக வையாகரண ஸம்மதியை எடுத்துரைத்தேனே அதுவும் தப்பா?

ஆ:—வெகு விசித்திரம்! அமாவாசையன்று தம்பதிகளுக்கு ருது சாந்தி முகூர்த்தம் நிச்சயம் பண்ணுவதின் பொருட்டு दर्शस्सूर्येन्दुसङ्गमः என்ற கோச வசனத்தை ஆதாரமாக எடுத்துக் காட்டுவதுபோலிருக்கிறதே.

தற்காலத்தியவர்களுக்குப் புத்தி சக்தி அதிகம் என்பது எதனால் தெரிகின்றதோ ?

நா:—இதற்குக் கேழ்வியும் வேண்டுமோ? ரயில் மோட்டார் தந்தி கம்பியில்லா தந்தி, மின்சார விளக்கு,யந்திரங்கள் போனகிராப்

ஆகாய விமானம் முதலிய அத்புத வஸ்துக்களெல்லாம் தற்கா லத்தியவர்களின் மேதா விலாஸத்தை விளக்கவில்லையா? இவை எல்லாம் ஆதிகாலத்தில் உண்டா?

ஆ:—இது உண்மைதான். ஆனால் இவற்றைப்பற்றி கொஞ்சம் ஆராய்ந்துபார்த்தோமானால் அனேக ஆபத்துக்கள்தான் முடிவில் ஏற்படுகின்றது.

மேனாட்டாரின் ஸயன்ஸ் பூலோகத்தை நாகலோகமாக மாற்றுகின்றது. ஆகவே இதனால் உபத்திரவமதிகமேயொழிய நன்மையில்லை. தவிற இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள “ஸயன்ஸ்” மிகச் சிறிதேயாகும். இவையெல்லாம் நம்முடைய சாஸ்திரங்களில் இருந்ததுதானேயன்றி நூதனமாகக் கண்டு பிடித்ததல்ல.

ருக்வேதத்தில் கப்பல், அசுவனி தேவர்களின் கப்பல் கட்டும் திறமை. ஆகாசம், பூமி, ஜலம், இம் மூன்றிலும் செல்லத்தக்க கப்பல். இவைகளைப்பற்றிச் சொல்லியிருப்பதால் ஆகாயவிமானம் புதிதல்ல, அப்படியே அதர்வண வேதத்தில் அனேக அபூர்வ யந்திரங்களும், கணிதங்களும், சுரங்கங் கட்டுதல் முதலிய விஷயங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. நம் சாஸ்திரங்களில் சொல்லப்படாத விஷயம் யாதொன்றுமில்லை. ஆனால் நம் சாஸ்திரப்படி ஏற்பட்டுள்ள இவ் வஸ்துக்களால் யாதொரு உபத்திரவமுங் கிடையாது. இதுதான் வித்தியாஸம். அப்படிப்பட்ட கிரந்தங்களில் சிலவற்றைக் கரையானுக்கிரையாக்கி விட்டோம். மிச்சம் மீதியுள்ளதை மேனாட்டினர் அபஹரித்துக்கொண்டுபோய் அதன்மூலமாக நல்ல பிரயோஜனத்தைப் பெற்றுவிட்டார்கள்.

நாமோ சாப்பாட்டுக்கு வழிசெய்துகொண்டால் போதுமென்ற நிலைக்கு வந்துவிட்டோம். அதனால் அவற்றை நாம் புனருத்தாரணம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அவை மறுபடியும் விருத்தியானால் சௌக்கியத்தைத் தரக்கூடிய நாகரீகம் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

நா:—இதெல்லாம் வெகு நாள்பட்ட ஸமாசாரமல்லவா? இவற்றையெல்லாம் நம்பமுடியாது ஐயா.

ஆ:—ஆனால் தாய், தந்தை, பாட்டன், பாட்டி, இவர்களையும் தாங்கள் நம்பமாட்டீர்கள். அவர்களிடம் நம்பிக்கையில்லாமல் தாங்கள் ஆகாசத்திலிருந்து திடீரென்று குதித்துவிட்டீரோ? அவர்களையும் அவர்கள் காரியத்தையும் நீர் அங்கீகரிப்பீரேயானால் முன்னோர்களையும் அவர்களின் அத்புதச் செயல்களையும் அதற்குக் காரணமாயுள்ள சாஸ்திரங்களையும் நீர் அவச்யம் அங்கீகரித்தே தீரவேண்டும். ஆதலால் இன்றுமுதல் குதர்க்கத்தை விட்டு சாஸ்திரத்தில் நம்பிக்கை வையும். நம்பிக்கைமாத்திரத்தினாலேயே நீர் க்ஷேமமடைவீர். பிறகு அனுஷ்டிப்பதற்குத் தாமே பிரவிருத்திப்பீர். மேனாட்டு நாகரீகத்தில் மயக்கத்தை அடியோடு தொலைத்துவிடும்.

இதுதான் உமக்கு க்ஷேமம். எனக்கு நாழிகையாகிவிட்டது. நான் போய்வருகிறேன். இன்னொரு சமயத்தில் தங்களை நான் பார்க்கவருவேன். அப்போது சாஸ்திர நம்பிக்கையால் ஏற்பட்ட நன்மையைப்பற்றிய உமது அனுபவத்தைப் பிரகாசப்படுத்தவேண்டும். சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

புருஷார்த்தக் கிரமம்.

श्रीमच्छङ्करभगवच्चरणं निरवधि संसृतिनीरधितरणम् ।
दुर्मतनिष्ठाहंकृतिहरणं कलितापहरं कलये शरणम् ॥

சென்ற வருஷத்தில் என்னால் இந்த ஆர்யதர்மபத்திரிகையில் "அத்வைதமே வைதிகம்" என்ற அரிய பெரிய விஷயம் விஸ்தாரமாக அதற்குவேண்டிய பல அவாந்தரவிஷயங்களோடு எழுத உபக்கிரமிக்கப்பட்டு (75) பக்கங்களுக்குக் குறையாமல் எழுதப்பட்டு மத்தியில் நின்றுவிட்டது. ஒரே விஷயம் தொடர்ச்சியாய் வெகுதூரம் வந்துகொண்டிருப்பது அதைப் படிப்பவர்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணுகின்றது என்று சிலர் கூறினதும், "அத்வைதமே வைதிகம்" என்கிற விஷயத்தின் பெயர் அத்வைதத்தில் பற்றில்லாத பலருக்கு அருவருப்பை உண்டுபண்ணினதும் அவ்விஷயம் மத்தியில் நின்றதற்குக் காரணமே தவிர

வேறில்லை. பிறகு வேறு "மத்வாவதாராத்புத லீலாரஹஸ்யம்" என்கிற உலகம் அவச்யம் அறிய வேண்டிய பெரிய விஷயம் மத்தியில் எழுதப்பட்டு வந்ததும் இதற்குக் காரணம் என்று சொல்லலாம். இனி முன் எடுத்துக்கொண்ட "அத்வைதமே வைதிகம்" என்ற விஷயத்தையே அந்தப் பெட்டை மாத்திப் பல வித அவாந்தர விஷயங்களின் பெயரை அவ்வப்போது வைத்துக் கொண்டே அதிகத்துடர்ச்சி யில்லாமல் முடிவில் அத்வைதமே வைதிகம் என்கிற விஷயத்தில் பர்யவஸானம் வரும்படியான அவாந்தரமான பலவித விஷயங்களை எனது புத்திக்கு எட்டிய வாறு எழுதலாமென்று எண்ணிக் கரையில்லாத ஸம்ஸாரஸமுத்ரத்தைக்கடத்துவதும் அவைதிக துர்மதஸ்தர்களுடைய துராஹங்காரத்தைக்கண்டிப்பதும் கலியினுல்வந்தகொடுமையைவிலக்குவது மான ஸ்ரீசங்கரபகவத்பாதாளுடைய சரணகமலத்தைச் சரணமடைந்து அதன் பலத்தால் துணிந்தேன். முன் தர்மார்த்தகாம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களின் கிரமத்தை நிரூபணம் செய்து வந்ததில் அர்த்த காமங்களைத் தர்ம மோக்ஷங்களுக்கு நடுவில் வைத்துக் கூறியதின் கருத்தைக் கூறும்பொழுது அர்த்தம் காமம் இரண்டும் நல்லது கெட்டது என இருவகைப்படுமென்றும் தர்மம் மோக்ஷம் இரண்டும் அவ்விதம் இரண்டுவகைப் படாது. நல்லது என ஒரே விதமாயுள்ளனவென்றும் அர்த்தகாமங்கள் தர்மத்திற்கு விருத்தங்களானுல் கெட்டது தர்மத்திற்கு அவிருத்தங்களானுல் நல்லது என்றும் தர்மவிருத்தமாகாத அர்த்தகாமங்களே பகவத் ரூபங்களென பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கின்றனவென்றும் தர்மவிருத்தமாகாத அர்த்தகாமங்களே புருஷார்த்தகோடியில் சேருமென்றும் புருஷார்த்தம் என்றும் சொல்லில் அடங்கிய புருஷஎன்னும் பதம் விவேகிகளாகிய புருஷர்களையே சொல்லுமாதலால் விவேகிகளாகிய புருஷர்களால் ஆசைப்படக்கூடிய அனர்த்தகாமாயில்லாத நல்ல அர்த்தகாமங்களே புருஷார்த்தம் என வியவஹரிக்கப்படுவது உசிதமென்றும் நிரூபிக்கப்பட்டு விஷயம் முடிவடைந்திருக்கிறது.

இனி அதற்குமேல் உள்ள அதன் பாக்கி விஷயங்களையும் கூறிப் புருஷார்த்தக் கிரமம் என்னும் அவாந்தர விஷயத்தைப் பூர்த்திசெய்ய உத்தேசிக்கிறேன். முதலில் தர்மம் முதலிய நான்கு புருஷார்த்தங்களையும் அடையவேண்டிய ஸாதனங்களைக்

கூறும் சாஸ்திரங்கள் தர்மசாஸ்திரம். அர்த்தசாஸ்த்ரம் காம சாஸ்திரம் மோக்ஷசாஸத்ரம் என நான்கு வகைப்படும். அவற்றுள் தர்மசாஸ்திரம் என்பது மனுமுதலிய மஹர்ஷிகளின் ஸ்மிருதிகள் கல்பஸூத்திரங்கள் மஹாபாரதம் ராமாயணம் முதலிய இதிஹா ஸாதங்கள் புராணங்கள் பூர்வமீமாம்ஸை முதலிய தர்மத்தைக் கூறும் நூல்கள். அர்த்தசாஸ்திரம் என்பது சுக்ரநீதி கௌடில்ய நீதிமுதலிய நீதிசாஸ்திரம் அச்வசாஸ்திரம், சில்பசாஸ்திரம், பாக சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் முதலிய அர்த்தஸம்பாத னேபாயத்தைக் கூறும் நூல்கள். காமசாஸ்திரம் என்பது வாத்ஸ் யாயனமஹர்ஷி ஸுச்ருதர் முதலியவர்களால் இயற்றப்பட்ட விஷயஸுகங்களை அனுபவிப்பதற்கு வேண்டிய ஸாதனங்களைக் கூறும் நூல்கள். மோக்ஷசாஸ்திரமென்பது நியாயம் வைசேஷி கம் ஸாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம் பாசுபதம் வேதாந்தம் முதலிய ஸம்ஸாரபந்தத்திலிருந்து விலகுவதற்குவேண்டிய ஸாத னங்களைக்கூறும் தர்சனங்கள் என்று பிரஸித்தங்களான நூல் கள். இவற்றுள் அர்த்தசாஸ்திரம் காமசாஸ்திரம் இரண்டும் தர்ம சாஸ்திரத்துக்கு விரோதமில்லாத வரையில் கிராஹ்யங்களாகும் தர்மசாஸ்திரத்திற்கு விரோதமுள்ளவிடத்தில் தள்ளவேண்டிய வைகளாகும். ஏனெனில் அர்த்தகாம சாஸ்திரங்களைவிட தர்ம சாஸ்திரம் பிரபலமானதால் அதனால் துர்பலங்களாகிய அர்த்த காமசாஸ்திரங்கள் விரோதமுள்ளவிடத்தில் பாதிக்கப்படுவது உசிதமன்றோ. இவ்விஷயம் யாஜ்ஞவல்க்ய ஸ்மிருதியில் வியவ ஹாராத்யாயத்தில்

अर्थशास्त्रात्तु बलवद्धर्मशास्त्रमिति स्थितिः ।

"அர்த்தசாஸ்திரம் தர்மசாஸ்திரம் இவைகளுக்குப் பரஸ்பரம் வி ரோதம் வருமிடத்தில் அர்த்த சாஸ்திரத்தைவிட தர்மசாஸ்திரம் பிரபலமென்று சாஸ்திரங்களின் மர்யாதை" என்று கூறப்பட்டி ருக்கிறது. இவ்விடத்தில் தர்மசாஸ்திரம் அர்த்தசாஸ்திரம் இரண் டுக்கும் ஸ்வரூபத்தில் வித்தியாஸமில்லாத போனலும் அதனல் அறியப்படும் தர்மம் அர்த்தம் இவைகளுள் தர்மம் அர்த்தத்தை விடப் பிரதானமானதால் அர்த்தம் தர்மத்தைவிட அப்பிரதான மானதால் தர்மம் அர்த்தம் என்னும் பிரமேயத்தின் பலாபலத்

தால் தர்மசாஸ்திரம் அர்த்தசாஸ்த்ரத்தை விடப் பிரபலமாகின்றது என்று கருத்து. தர்மம் பிரதானம் என்கிற விஷயம்

अर्थस्य प्राधान्यञ्च धर्ममूलत्वादितरेषाम् । नच वक्तव्यं धर्ममूलोऽर्थोऽर्थमूलो धर्म इत्यविशेषइति। यतोऽर्थमन्तरेणापि जपतपस्तीर्थयात्रादिना धर्मनिष्पत्तिः । अर्थलेशोऽपि न धर्ममन्तरेणेति । एवं काममोक्षावपीति ॥"

"அர்த்தம் காமம் மோக்ஷம் இவைகளுக்குத் தர்மம் மூலகாரணமாயிருப்பதால் தர்மம் பிரதானமாகும். அர்த்தத்திற்குத் தர்மம் மூலமாவதுபோல் தர்மத்திற்கும் அர்த்தம் மூலமாகக் காணப்படுவதால் தர்மார்த்தங்களுக்குள் ஒன்றுக்கொன்று விசேஷங்காணப்படவில்லையே என்று சொல்லக்கூடாது. எனெனில் அர்த்தமில்லாமலும் ஜபம் தபஸ் தீர்த்தயாத்திரை முதலியதால் தர்மம் ஏற்படும் அதுபோல் அர்த்தலேசங்கூட தர்மமில்லாமல் ஏற்படாது. இதுபோல் காமம் மோக்ஷம் இவைகளும் தர்மமில்லாமல் ஏற்படாது ஆகையால் அர்த்தமில்லாமல் தர்மம் ஏற்படுவதுபோல் தர்மமில்லாமல் அர்த்தம் ஏற்படாயலிருப்பதே அர்த்தத்தை விட தர்மத்திற்கு விசேஷம். ஆகவே எல்லாவற்றிற்கும் மூலஸ்தம்பம் போல் தர்மமிருப்பதால் தர்மம் எல்லாவற்றிற்கும் பிரதானம்" என்று மிதாக்ஷரையில் விஜ்ஞானேசுவரரால் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் தர்மசாஸ்திரம் அர்த்தசாஸ்திரம் இவைகளுக்கு விரோதம் வருமிடத்தில் அர்த்தசாஸ்திரத்தைத் தள்ளவேண்டியதுதான் உசிதமாகும். இதற்கு உதாஹரணம் மிதாக்ஷரையில் கூறப்பட்டிருக்கிறது.

"हिरण्यभूमिलाभेभ्यो मित्रलब्धिर्वरा यतः । अतो यतेत तत्प्राप्तौ ।"

"ஸ்வர்ணலாபம் பூமிலாபம் முதலியவைகளைக் காட்டிலும் மித்திரலாபம் சிலாக்கியமானதால் மித்திரலாபத்திற்குப் பாடுபடவேண்டும்" என்பது அர்த்தஸம்பாதனத்திற்கு உபாயமான மித்திரலாபத்தைக் கூறுவதால் அர்த்தசாஸ்திரம்.

व्यवहारान्नृपः पश्येद्विद्वद्भिर्ब्राह्मणैस्सह ।
धर्मशास्त्रानुसारेण क्रोधलोभविवर्जितः ॥

"ராஜாவோ அல்லது பிரஜைகளை ரக்ஷிப்பதில் அதிகாரம் பெற்ற மந்திரி முதலிய அதிகாரிகளோ தர்மசாஸ்திரப்படிக்கு பிராம்

மண்ர்களுடன் கூட இருந்துகொண்டு கோபம் லோபம் முதலிய துர்க்குணங்களில்லாமல் தர்மசாஸ்திரத்தை அநுஸரித்து வியவஹாரங்களைக் கவனிக்கவேண்டும்'' என்பது பிரஜைகளைப் பரிபாலிப்பதாகிய ராஜதர்மத்தைக் கூறுவதால் தர்மசாஸ்திரம்' இவ்விரண்டுக்கும் ஓரிடத்தில் விரோதமேற்படுகின்றது. அதாவது. கோர்ட்டு முதலிய நியாயஸ்தலத்தில் வாதிப்பிரதிவாதிகளுடைய வியவஹாரம் நடக்கும் பொழுது வாதிகக்ஷிக்கு ஸாதகமாகத் தீர்ப்புச் சொன்னால் ஜட்ஜிக்கு மித்ரலாபம் ஏற்பட்டு அதனால் விசேஷமாகத் தனலாபம் ஏற்படுவதாயிருக்கிறது. ஆனால் தர்மசாஸ்திரம் அனுஸரிக்கப் பட்டதாக ஆகாது. அதற்கு விரோதம் தான். பிரதிவாதி கக்ஷிக்கு ஸாதகமாகத் தீர்ப்புச் சொன்னால் தர்மசாஸ்திரத்திற்கு விரோதமில்லாமல் நியாயவழியில் ஒழுங்காகத் தீர்ப்புச் சொன்னதாய் முடியும். ஆனால் மித்திரலாபம் ஏற்பட்டுப் பணம் கிடைக்காது. மேலும் பிரதிவாதி ஜட்ஜிக்குச் சத்துருவாயுள்ளவன். இவ்விதஇடத்தில் எதைஅனுஸரிக்கவேண்டும்என்பதையோஜிக்கும்பொழுது தர்மசாஸ்திரம்பிரபலமானதால் மித்திரலாபம் வாராமல் போனாலும் சத்துருவாயிருந்தாலும் பிரதிவாதிகக்ஷிக்கு ஸாதகமாகவே ஜட்ஜி தீர்ப்புச் செய்யவேண்டும். லஞ்சம் வாங்கிக் கொண்டு அநியாயத்தீர்ப்பு செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் லோகாபவாதத்தோடு ராஜசிக்ஷையும் அந்த ஜட்ஜிக்கு ஏற்படும்.

(தொடரும்.)

போலகம் சு. ஸ்ரீ ராமசாஸ்திரிகள்.

(மனுஸ்மிருதி அத்தியாயம் 2)

சில வசனங்கள்.

1. குருவுடன் காற்றடிக்கும் திசையை நோக்கியாவது எதிர்த்தாவது சிஷ்யன் உட்காரக்கூடாது. குரு காதில் விழாதபடி சிஷ்யன் ஒன்றும் பேசக்கூடாது.

2. எருது, குதிரை, ஒட்டகம் இழுக்கும் வண்டியிலும், மேன்மாடத்திலும், படுக்கையிலும், பாயிலும், கல்லிலும், பலகையிலும், படகிலும், சிஷ்யன், குருவுடன் கூட உட்காரலாம்.

3. குருவின் குரு சமீபமிருந்தால் குருவைப்போலவே அவ ரையும் நமஸ்கரிக்க வேண்டும். குருவின்வீட்டிலிருக்கும்பொழுது சிஷ்யன் குருவின் அனுமதியிருந்தாலொழிய தன் குடும்பப் பெரியவர்களை நமஸ்கரிக்கக் கூடாது.

4. தன் ஆசார்யரிடத்தில் போலவே இதரவித்வான்களிடத்திலும் மரியாதைக் குறிய தன் இனத்தாரிடத்திலும் பாவத்திலிருந்து தன்னைத் தடுக்கிறவர்களிடத்திலும் தனக்கு ஹிதோபதேசம் செய்கிறவர்களிடத்திலும் சிஷ்யன் நடந்துகொள்ளவேண்டும் என்பது நிலையான விதி,

5. வித்யை தபஸ் நிறைந்த பெரியவர்களிடத்திலும் பூஜ்யாளான குருபுத்திரர்களிடத்திலும் குருவின் தாய் தந்தை வம்சத்தார்களிடத்திலும், குருவினிடத்தில் போலவே மரியாதையுடன் நடக்கவேண்டும்.

6. குரு ஸ்தானத்தில் தனக்குக் கற்பிக்கும் குருபுத்ரன் தன்னைவிட சிறுவனோ ஸமான வயதுள்ளவனோ யக்ஞம் அங்கம் முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சி அடைந்தவனோஅல்லவோ அவனுக்கு மரியாதையைச் செய்யவேண்டும்.

7. ஆனால் குருபுத்ரனுக்கு உடம்பு பிடித்தல் ஸ்னான விஷயத்திலுதவி உச்சிஷ்டபோஜனம் பாதப்ரக்ஷாளனம் ஆகிய மரியாதையைச் சிஷ்யன் செய்யக் கூடாது.

8. ஸமானஜாதியான குருபத்னிகள் குருவைப்போலவே பூர்ணமரியாதைக்குப் பாத்திரர்கள். ஸமானஜாதியல்லாதவர்கள் எழுந்து நமஸ்கரிக்க மாத்திரம் அர்ஹதையுள்ளவர்கள்.

9. குருபத்னிக்கு எண்ணெய்த் தேய்த்தல் ஸ்னானம் செய்வித்தல் உடம்பு பிடித்தல், தலை, முதலியவையின் அலங்கரித்தல், இவைகளைச் செய்யவே கூடாது.

10. இருபது வயது நிறைந்து யுக்தாயுக்தம் தெரிந்த சிஷ்யன் சிறுமியான குரு பத்னியை பாதம் தொட்டு நமஸ்கரிக்கவே கூடாது.

R. ஸ்வாமிநாதய்யர்.

ஸ்ரீ பகவத்கீதையும், வர்ணாச்ரம தர்மமும்.

(854-வது பக்கத்தொடர்ச்சி)

இப்படி ஒவ்வொரு ஜாதியினரும் தங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மங்களைச் சிரத்தையுடன் அநுஷ்டித்து வந்தாலே மோக்ஷம் முதலிய ஸகல சிரேயஸுகளும் அவர்களுக்கு உண்டாகிறதாக இதர சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருப்பதையே கீதையிலும் பகவான் சொல்லுகிறார். ஆகவே கர்மாநுஷ்டானங்களைப் பற்றி கீதையில் வற்புறுத்தப் படவில்லையென்று நவீனர்கள் நினைப்பது தவறாகும். அர்ஜுனன் க்ஷத்திரியனாகவிருந்தும் தனது வர்ண தர்மமாகிய யுத்தத்தைச்செய்ய மறுத்ததுடன் பிராம்மண தர்ம மாகிய பிக்ஷாசாணத்தில் ருசிகொண்டதாலல்லவோ அவனுக்கு வர்ணாச்ரம தர்மங்களை யநுஷ்டிக்கவேண்டிய நிர்பந்தத்தையும், செய்யாவிட்டால் உண்டாகும் பாபத்தையும், பகவான் உபதேசித் ததுடன் பிறருக்கென்று விதிக்கப்பட்ட தர்மத்தை மாற்றியநுஷ் டிப்பதும் கூடாதென்று தடுக்கிறார். க்ஷத்திரியனுக்கு யுத்தம் ஸ்வதர்மமாகிலும் அதை அவன் கீதையில் பலவிடங்களிலும் உப தேசிக்கப்பட்டபடி பலாபிஸந்தி முதலியவைகளைவிட்டு கட்டாய மாக அநுஷ்டிக்கவேண்டியது. இதனால் அவனுக்கு மோக்ஷாதி களும் கிடைப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் கீதையில் 2-வது அத்யாயத்தில், 15, 18, 37, சுலோகங்களிலும் அதன் பாஷ்யத்திலும் விளக்கப்பட்டிருக்கிறது. 37-வது சுலோ கத்தின் ஸ்ரீராமனுஜ பாஷ்யத்தில் "பலாபிஸந்தியின்றி செய்யப் படுகிற யுத்தமாகிய தர்மமானது பரமசிரேயஸ்ஸுக்கு உபாயமாக விருக்கிறது, ஆகையால் யுத்தமானது பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்திற்கு ஸாதனமென்று நினைத்து அதைச்செய்வாயாக" என்று விளக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேணும். ஆகையால் தான் "இந்த தர்மயுத்தத்தை நீ செய்யாது விட்டால், அதனால் ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையுமிழந்து பாபத்தை யடைவாய்" என்று (1-33) பகவான் தீவ்ரமாகச் சொல்லுகிறார்.

இப்படி அர்ஜுனனுக்கு ஸ்வதர்மமாகிய யுத்தத்தை பலாபி ஸந்தி முதலானவைகளைவிட்டு பகவத் பிரீதியொன்றையே கருதிச் செய்யவேணுமென்று பகவான் வற்புறுத்துவதன் மூலமாக பிராம்ஹணாதி மற்ற வர்ணத்தினரும் தங்களது தர்மாநுஷ்டாநங்களைச் செய்யவேண்டிய ஆவச்யகதையையும் உபதேசித்து விட்டார்; ஆகவே பிராம்ஹணன் தனக்கு சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட யாக, அக்நிஹோத்ர, பஞ்சமஹாயக்ஞாதிகளான நித்ய கர்மங்களையும், பல நைமித்திக தர்மங்களையும், பிராம்ஹணனுக்கென்றே ஜீவனார்த்தமாக விதிக்கப்பட்ட, யாஜந, அத்யாபநாதிகளையும் அநுஷ்டிக்கவேண்டுமென்பதை கீதையில் பகவான் பல விடங்களில் பிரபஞ்சித்து இருக்கிறார். ஆகையால் மூடநம்பிக்கை நிறைந்த கர்மாநுஷ்டாநங்களை கீதை விதிக்கவில்லையென்று நினைப்பதே மூடத்தனமாகிறது. மூன்றுவது அத்யாயத்தில் பகவான் யக்ஞங்களை யனுஷ்டிக்கவேண்டிய ஆவச்யகதையைச் சொல்லத் துடங்கி பகவதாராதநரூபங்களான யக்ஞாதிகளை முமுக்ஷுக்கள் முதல் யாவரும் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், தேவதைகளால் கொடுக்கப்பட்ட திரவியங்களைக்கொண்டு அவர்களை ஆராதிக்காமல் தான்வயிறுவளர்க்கக்கூடாதென்றும், பகவதாராதனமின்றி தனக்கென்றே பாகம்செய்து தின்பவன் பாபத்தையே சாப்பிடுவதாகவும் பல நிந்தைகளைவெளியிட்டு கர்மாநுஷ்டாநத்தை ஸ்திரப்படுத்துகிறார். (3-11-16) ஆனால் 2-வது அத்யாயத்தில் பகவான் சொல்லுகையில் "சில அல்பப்படிப்புள்ளவர்கள் வேத வாதத்திலேயே ஆஸக்திகொண்டு ஸ்வர்க்கம் முதலிய சில்லரை புருஷார்த்தங்களையே பெரிதாக நினைத்தும் அதற்கென்றே பல கர்மங்களை அநுஷ்டித்துவருவதாயும், பரிஹஸித்து இருப்பதைக் கொண்டு வைதிக கர்மாநுஷ்டானம் வேண்டியதில்லையென்று சில மந்தபுத்திகள் நினைக்கக்கூடும். ஸ்வர்க்கம் முதலிய சிறிய பிரயோஜநத்தை யுத்தேசித்து, பெரிய புருஷார்த்தமானமோக்ஷத்தை மறந்து அல்பபலனைக் கொடுக்கக்கூடிய காம்யகர்மங்களைச் செய்வோரையே பகவான் அங்கு நிந்திக்கிறார். எந்த கர்மத்தையும் பலனை யுத்தேசிக்காது செய்யவேண்டுமென்கிற நியமத்தை வற்புறுத்துவதே பகவானின் நோக்கமாகும். இதை அடுத்த சுலோகத்தில் "கர்மத்தில் மாத்திரம் உனக்கு அதிகாரமேயல்லது, தர்மபலனில் அதிகாரம் கிடையாதெ"ன்று ஆரம்பித்து எந்த கர்

மாவையும் பலாபிஸந்தியின்றிச் செய்யவேண்டுமென்று முடிக்கிறார். மேலே இன்னும் பலவிடங்களில் வேதோக்த கர்மங்களை விடாது செய்யவேண்டுமென்று நிர்பந்திக்கிறார். கர்மபலனை அபேக்ஷியாமல், கர்மத்தையே பிரும்மஸ்வரூபமாக நினைத்துச் செய்யும், ஒருவனுடையகர்மாவானது மிகச்சிறந்ததாகும். வைதிக கர்மத்தில் உபயோகிக்கப்படுகிற, ஸ்ருக், ஸ்நுவம் முதலிய பாத்திரங்கள் பிர்மஹமென்றும், அதுபோல் ஹவிஸ், அக்கி, கர்மாவைச் செய்பவன், எல்லாம் பிரும்மமென்றும் எவன் நினைத்து கர்மாவை செய்கிறானோ அவன் பிர்மஹத்தையே அடைவான்'' (4-24) என்று சொல்லி பற்பல விதயக்ஞங்களை பகவான் விவரிக்கிறார். 18-வது அத்யாயத்திலும் முமுக்ஷுக்களுக்கு யக்ஞாதிகர்மங்கள் மிக ஆவச்யகங்களென்று நிச்சயமாக பகவான் உறுதி செய்கிறார். பகவான் வைதிககர்மங்களை நிந்திப்பதாக மேலிழுந்தவாரியாக வாதம்செய்தால் இவைகளெல்லாம் போகும் வழியென்ன? மற்றொன்றும் முக்கியமாய் கவனிக்கத்தக்கது. 3-வது அத்யாயத்தில் கர்மாநுஷ்டானங்களை வற்புறுத்தும் பிரகாணத்தில் பகவான் வைதிககர்மாநுஷ்டானங்களைவிடமுடியாததென்பதற்குதன்னையே உதாஹரணமாகச்சொல்லுகிறார். தாம் ஈச்வரனாக இருப்பினும் கர்மாநுஷ்டானங்களால் தமக்கு ஆகவேண்டிய காரியமில்லையாகிலும், மனிதஜன்மத்தில் பிறந்துவிட்டபடியால் தமது ஜாதி குலத்திற்கேற்றதான கர்மாவைத் தாமும் அநுஷ்டித்தே வருவதாயும், அப்படித் தாம் செய்து காண்பிவிக்காவிடில், உலக மரியாதையை அழித்து கர்மஸாங்கர்யம் ஏற்படும்படி செய்த பாபம் தனக்கு நேருமென்றும் சொல்லி ஜனகர் முதலியவர்கள் கர்மாநுஷ்டானத்தினாலேயே மோக்ஷம் பெற்றதையும் காட்டி வைதிக கர்மாநுஷ்டானங்களை ஸ்திரப்படுத்துகிறார். இதிலிருந்து யக்ஞாக்நிஹோத்ராதி வைதிககர்மங்கள் ஸ்வர்க்கபலனை யுத்தேசித்து விதிக்கப்பட்டவைகளாதலால் முமுக்ஷுக்களுக்கு அவை உபாதேயங்களல்லவென்று சில அரைப்படிப்பாளிகள் சொல்லுவதும் நிராகரிக்கப்பட்டது. யக்ஞாக்நிஹோத்ராதி வைதிககர்மங்களுக்கு காம்யத்வம், நித்யத்வம், பிர்மஹவித்யைக்கு அங்கமாயிருத்தல், ஆகிய மூன்று ஆகாரங்கள் உண்டென்று தனித்தனியாக மூன்று வேதவிதிகள் இருப்பதை அவர்கள் அறிந்தவர்களல்லர். பிர்மஹஸூத்திரத்தில் யக்ஞாதிகள் பிர்மஹவித்யைகளுக்கு அங்கங்

களாயிருப்பதுடன் ஆச்ரம தர்மங்களாயுமிருக்கின்றனவென்று நிர்ணயிக்கப்பட்டது. கீதையிலும் 18-வது அத்யாயம் 12-வது ச்லோகத்தில் இவ்விஷயம் விவரிக்கப்பட்டிருப்பதையும், அங்கு பாஷ்யகாரர்களும் ஸ்ரீ தேசிகாதிகளும் வெளியிட்டிருக்கிற ஸித்தாந்தங்களையும் இவர்கள் அறிந்து கலக்கம் தெளிவார்களாக.

(தொடரும்)

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ப்ரஹ்லாதன்.

1. ஹிரண்யகசிபு என்றோர் அஸுர ராஜனிருந்தான், அவன் பதினோராயிரத்து ஐநூறு வருஷம் கடல் ஜலத்தில் முழுகித் தவம் செய்தான். பிரும்மதேவர் அவன் எதிரில் வந்தார் அவரை வணங்கித் துதித்தான். அவர் உனக்கு என்னவரம் வேண்டும் என்றார். தேவராலும் கந்தர்வராலும் மனுஷ்யராலும் மிருகங்களாலும், மற்றெதனாலும் தனக்கு சாவு கூடாதென்றான்.

2. ஆயுதத்தாலும், மற்றெதனாலும், பூமியாலும், ஆகாயத்திலும், பகலிலும், இரவிலும், உள்ளும் வெளியிலும், எங்கும் தனக்கு மரணமில்லை என்று வரம் கேட்டான். பிரும்மா அப்படியே ஆகட்டுமென்று கூறி மறைந்தார். உடனே ஹிரண்யன் எழு லோகங்களையும் ஜயித்தான். அவைகளைத் தன் வசமாக்கி ஆண்டான்.

3. தேவர்களை அடித்துத் துரத்தினான். அவர்கள் செய்த வேலையை அஸுரருக்கு அளித்தான். நானே எல்லோருக்கும் அரசனாக இருப்பேன் என்றான். நரகத்திலிருப்பவர்களை விடுவித்தான். அவர்களை ஸ்வர்க்கத்தில் கொண்டுவைத்தான். நானே தைவம். தன்னைவிட சிறந்த தைவம் வேறில்லை என்றான்,

4. ஸாதுக்களை ஹிம்ஸித்தான். ஐந்துகோடியே எழுபதினாயிரத்து அறுபத்தோர் வருஷம் ஆட்சிபுரிந்தான். இவன்செய்த கொடுமை பொறுக்கமுடியவில்லை. தேவர்கள் ஓடி பிரும்மாவைச்

சரணமடைந்தனர். அவர் வைகுண்டம் செல்லும்படி கூறினர். அங்கு சென்று பகவானைப் பணிந்து துதித்தனர்.

4. பகவான் விரைவில் அவனைக் கொல்வதாக வாக்களித்தார். தேவர் இருப்பிடம் சென்றனர். ஹிரண்யனுக்குப் பல புதல்வருண்டு. மூற்றவன் பெயர் ப்ரஹ்லாதன். இவன் தாயின் வயிற்றிலிருக்கும்போது நாரதர் இவர் தாய்க்கு விஷ்ணுபக்தியை உபதேசித்தார், ஆதலால் இவன் பிறந்தவுடன் பக்தனானான்.

6. இவனது விளையாட்டெல்லாம் விஷ்ணுவைப் பூஜிப்பதே. அடிக்கடி பகவன் நாமாவைச் சொல்வான். பஜனை செய்வான். தான் சாப்பிடும் பதார்த்தங்களையெல்லாம் பகவானுக்குக் காட்டிச் சாப்பிடுவான். எந்த வேலையிலும் அவனுக்குப் பகவான் ஞாபகமே. தான்மாத்ரமில்லை கூட விளையாடுபவர்களையும் அப்படியே செய்துவிட்டான்.

7. இது அவன் தந்தைக்குப் பிடிக்குமா? குழந்தையை மிரட்டினான். நயமாகச் சொன்னான். என்ன சொன்னாலும் அவன் நாராயணனை மறப்பதே இல்லை. ஹிரண்யன் அவனைத் தனக்கு சத்ரு என்று எண்ணினான். ஆதலால் அவர் பேரைச் சொல்லும்போது இவனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. என் செய்வான் அவன்?

8.குழந்தைக்கு விஷத்தைக் கொடுத்தான். அது அவன்பக்தியால் அமிருதமானது. மலையிலிருந்து தள்ளினான். கடலில் அமிழ்த்தினான். யானையை அவன்மேல் ஏவினான். என்ன செய்தாலென்ன? அவன் ஏன் சாகிறான். அவனைக் காப்பவர் விஷ்ணுவன்றோ? பக்தன் கஷ்டப்பட அவர் பார்ப்பாரா?

9. குழந்தையை அஸுர குருவிடம் அனுப்பினான். துர்ப்போதனை செய்யச்சொன்னான். அப்போதும் குழந்தைக்கு துர்ப்புத்தி உண்டாகவில்லை. நீ கற்றதில் நல்லதைச் சொல் என்றான் ஹிரண்யன். ப்ரஹ்லாதன் பகவான் சரித்த்தைக் கேட்பது அவர் பேரைச் சொல்வது முதலிய ஒன்பது வித பக்தியே சிறந்தது என்றான்.

10. அஸுரனுக்குக் கோபம் வந்தது. அந்த விஷ்ணு எங்கே இருக்கிறார் என்றான். அவர் எங்குமிருக்கின்றார் என்றான்

பக்தன். ஆனால் இந்தத் தூணிலிருப்பாரா என்று தூணைக் காலால் உதைத்தான். அதிலிருந்து நரஸிம்மஸ்வாமி கிளம்பினார். வாசற்படியில் ஸாயங்காலத்தில் அஸுரனைமடியில்வைத்துக்கொண்டார் நகத்தால் கிழித்துக் கொன்றார். ஹிரண்யனைப்போல் கர்வங் கொள்ளாதே. ப்ரஹ்லாதனைப்போல் பக்தனாயிரு.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

எச்சரிக்கிறார்கள். 29௨ சென்னையில் மாஜி மந்த்ரியும், 22௨ மாஜி அட்வகேட்ஜநரல் ஹைதராபாத்திலும், 26௨ சென்னை வாலிபர் சங்கமும் மத விஷயமாக உபன்யாஸம் செய்தனர். ஆங்கிலம் கற்று அதிலும் உத்யோகம் வஹிப்பவர் ஸாதாரணமாக எப்படி பேசுவர் என்பது நமக்குத் தெரியாததல்ல, வர்ணாச்ரமாசாரங்களை அழிக்கவே ஸ்வராஜ்யம் வேண்டுமென்பது அவர்கள் கொள்கை. ஆஸ்திக ஜனங்கள் ஒன்றுகூடி ஸதாசாரத்தை விடாதிருக்கும்படி எச்சரிப்பதாக இருக்கின்றன அவர்கள் சொற்கள். ஆதலின் ஆஸ்திகர் விழித்தெழுக!

* * * * * * *

யார் தீர்ப்பு சொல்வது? 29௨ மாயவரத்தில் நாகை ஜில்லா ஜட்ஜ் ஹிந்துமதத்தின் மேன்மையைக் குறித்து ஓர் உபன்யாஸம் செய்தார். யாகத்தில் செய்யும் பசுபந்தம் நியாயமற்றதென்றும் இதைக் கூறுபவர் கொலைசெய்யவில்லையா? என்கிறார். இந்த நீதிபதியின் மதாபிமானத்தைப் போற்றுகிறோமாயினும் யாக விஷயமாக இவர் கூறிய "நியாயமற்ற" என்ற தீர்ப்பையும் சண்டாள விஷயமாகச் சொன்னதையும் நாம் ஏற்பதற்கில்லை. லௌகிக விஷயங்களில் தீர்ப்பு கூறிய வாஸனையால் ஷை நீதிபதி "இவ்விஷயத்தில் எவர் தீர்ப்புசொல்வதற்குறியவர்? தான் கூறிய தீர்ப்பு எதுவரை நியாயமானதெ"ன்பதை மறந்திருக்கலாம். பொதுவாக சென்றவிடம் எல்லாம் நல்லுபதேசம் புரியும் இவரை ஆமோதிக்கிறோம்.

கீதாசாரம். 25உ பீளமேடு ஹைஸ்கூலில் ௸ விஷயமாக ஓர் உபாத்தியாயர் மாணவர்களுக்கு ஓர் உபன்யாஸம் செய்தார். கீதையின் மேன்மையை மாணவருக்கேற்றபடி கூறினார். அத்துடன் நின்றிருந்தால் நன்றாக இருக்கும். தீண்டாமைக்கு இடம் இல்லையென்று கீதையில் ஸ்பஷ்டமாகக் கூறுகிறதென்று ஓர் விஷத் துளியை கீதாமிருதத்தில் கலந்தார். இவர் கீதையைப் பெரியோரிடம் முறைப்படி கேட்டு உணர்ந்திருந்தால் இங்ஙனம் கூறத் துணியார். இதை விலக்கி மற்றதைக் கொண்டாடுகிறோம்.

*   *   *   *   *   *   *   *

தர்ம ப்ரசாரம். தஞ்ஜை ஜில்லா பிராம்மண ஸபையினாதரவில் கும்பகோணத்தில் பிரும்மஸ்ரீ உ. வே. அக்நிஹோத்ரம் தாதாசார்யஸ்வாமிகளால் ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரத்தைக்குறித்து ஆறு உபன்யாஸங்கள் நடந்தன. தற்சமயம் பிரும்மஸ்ரீ ஜகதீச்வர சாஸ்திரிகளவர்கள் மனுஸ்மிருதி ப்ரவசனம் செய்துவருகிறார். இத்தகைய உபன்யாஸங்களே இக்காலத்தில் வேண்டற்பாலது. ஏனைய ஸபைகள் இதைப் பின்பற்றுமோ?

*   *   *   *   *   *   *

சென்னையின் உத்ஸாஹம். ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள்வரவை அறிந்து சென்னையிலுள்ள ஆஸ்திகமஹா ஜனங்கள் பேட்டை பேட்டையாகக் கூடி ஸ்ரீமுகத்தைத்தக்கபடி வரவேற்கின்றனர். கோபாலபுரம், திருவல்லிக்கேணி குரு கைங்கர்ய ஸபை திருவட்டீச்வரன்பேட்டை அத்யயன ஸபை கச்சபேச்வராலய ப்ரதேசம் மாம்பலம் முதலிய விடங்களில் மிக விமர்சையாக ௸ வைபவம் நடந்தது.

*   *   *   *   *   *   *

சாரதா சட்ட கண்டநம். 3உ சென்னை முத்யால்பேட்டை ராமாநுஜம் செட்டி கலாசாலையில் ஓர் பெருங்கூட்டம் கூடி ௸ சட்டத்தைக் கண்டித்து ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் திருத்தத்தை ஆமோதித்து டில்லிக்குத் தந்தியனுப்பியது. ராஜப்பிரதிநிதி நமது தூதை ஏற்காததைக் கண்டித்தும் தஞ்சைஜில்லா பிராமணஸபையின் முயற்சியை ஆமோதித்தும் மற்றவூர்களில் ஆஸ்திகர் உடனே

ஸபை கூட்டி ஷை சட்டத்தைக் கண்டிக்கும்படியும் சில தீர்மானங்கள் நிறைவேறின.

* * * * * * *

மதாபிமானம். 24-29உ ஸிம்லாவில் சென்னை மாகாண ஜனங்கள் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியைக்குறித்து ஸ்ரீருக்மிணீ கல்யாணத்தை வைதிகமுறையில கொண்டாடினர். பகவதர்ச்சனையும் பிராம்மண ஸந்தர்ப்பணையும் நன்முக அனுஷ்டிக்கப்பட்டது. தூரதேசம் சென்றும் மதாபிமானங்கொண்டு இத்தகைய கார்யங்களைச் செய்வதும் வைதிக கர்மாவிற்கு அவர்கள் செய்திருக்கும் தக்க ஏற்பாடும் மிகக் கொண்டாடத் தக்கது.

* * * * * * *

மஹாபதிவ்ரதை. 3உ ஆக்ராவிற்கருகிலுள்ள நகரில் ஓர் பிராமணச் சிறுமி தன் பர்த்தா இறந்தவுடன் உடன்கட்டை ஏற ஆரம்பித்தாள். அவளைப்போலீஸார் தடுத்து ஓர் வீட்டில் பூட்டினர். அவ் வுத்தமியைத் தர்சிக்க எண்ணிறந்த ஜனங்கள் கூடினர். இதுவரை கேட்பதற்கும் படிப்பதற்கும் மிக நன்றுய் இருக்கிறது. பின்னர் போலீஸார் ஜனங்களைச் சுட்டது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இக் கலியிலும் உத்தமிகள் காணக் கிடைக்கின்றனர். விதவா விவாஹம் செய்ய விரும்புவோருக்கு இவ் வுத்தமி புத்தி புகட்டுகிறுள்.

* * * * * * *

கும்பாபிஷேகம். 7உ கும்பகோணத்தில் ஆஞ்சநேயாலயத்திற்குக் கும்பாபிஷேகம் நடந்தது. இந்த தர்மகாரியத்தை நடத்தியவர் பரம தார்மிகரான ஸ்ரீமான் S. R. சுந்தரமய்யர். தார்மிகர் வாழ்க.

வே. ஸோமதேவ சர்மா.